முருகப்பெருமான் துணை
முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 712**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.09.2021, வெள்ளிக்கிழமை

1. குமரகிரி கண்ட குருராஜனே
குவலயம் காக்க வந்து அவதரித்த மாதவராஜனே
பெருமைபட நல்லுலகம் படைக்க வேண்டி
பேருலகில் ஞான அவதாரம் கொண்ட குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென பிலவ வேங்கை திங்கள் தன்னில்
வழங்குவேன் அரங்கனுக்கு பெருமை சேர்க்க
3. சேர்க்கவே அரங்கன் தர்மம் வழியே
பேருலகம் உலகமாற்றம் நிகழக்கூடும்
நேர்த்தியாக அரங்கன் தரும் உபதேசம் வழியே
நிலவுலகே ஞானபலம் பெறக்கூடும்
4. கூடவே அரங்கனை தொடர்ந்து வரும்
குறையில்லாத தொண்டர் படைகள் மூலமே
வரங்கள் என எங்கும் தர்மசக்தி பரவி
வையகமே தர்மலோகமாகக்கூடும்
5. கூடவே அரங்கனுக்குள் சுப்பன் யானும்
குறையில்லா மகா சக்தி வழங்கி இனிதே
நாடெங்கிலும் ஞான யுகமாற்றம் நிகழ
ஞானியர்களை உருவாக்கும் சேவையாற்றி வர
6. வருகின்ற இந்த மகா சூட்சுமம் அறிந்து
வையகத்தார் அரங்கன் ஞானவழிக்கு வர
வருகவே உலகமெங்கிலும் ஆறுமுகன் என் ஆசி பெற்ற
வல்லமையான ஞானியர்கள் தேர்வு செய்யப்பட்டு
7. தேர்வு செய்யப்பட்டு அரங்கன் அவதார நோக்கமாக
தெரிவிப்பேன் இந்த நல்லுலகம் ஞானயுகமாற்றம் பெற்று
பெற்றுமே பேருலகம் பாதுகாப்பு பெறும் பேரிடர் துன்பங்களில்லா நல்வழிக்கு வந்து
ஆற்றல்பட ஞானசித்தர் ஆட்சிக்காலமாக அரங்கன் வேண்டல்படி நிறைவேறும்

8. நிறைவேற அரங்கனுக்குள் ஆறுமுகன் யான்
நித்தம் நித்தம் ஞான சூட்சும சக்தி அருளி
குறையில்லா தவபலன்கள் பெருக்கி வர
கூறிடுவேன் ஓங்காரக்குடில் நோக்கி வரும் மக்கள் மூலமாக

9. ஆகவே உலகத்தில் பெருமாற்றம்
அற்புதம்பட ஆறுமுகன் யான் செய்து
வகைபட அரங்கஞானி அவதாரத்தின்
வல்லமையை உலகறியச் செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

வேலவன் அருளிய வேதமாம் இந்நூல்
ஞாலம் முழுவதும் ஞானிகள் ஆட்சியே!

மல மாயை அற்ற மாதவ வேலனை
நலமாக போற்றிட நாளும் சித்தியே!

மலமாயை அற்ற மாதவ வேலனை
நலமாக போற்றிட நாளும் சித்தியே